27.01.2026

O.S.No. 164/2022

PW1– முத்துலட்சுமி– க/பெ. முப்புடாதி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.01.2026

குறுக்கு விசாரணை : ( 1 முதல் 3 மற்றும் 5,6 பிரதிவாதிகள் தரப்பில்)

1. இந்த வழக்கின் வாதி எனதுகணவர் என்றால் சரிதான். தற்போது அவர் வெளிநாட்டில் டைல்ஸ் வேலை செய்துவருகிறார். முதல்விசாரணை வாக்குமூலத்திலோ, அல்லது ஆதரவோ எனது கணவர் வெளிநாட்டில் இருப்பதாக நான் எதுவும்சொல்லவில்லைஎன்றால் சரிதான், ஆனால் வெளிநாட்டில்தான் உள்ளார். அவர் சுமார் 20 ஆண்டுகளாக வெளிநாட்டில்தான் வேலை செய்துவருகிறார்.

2. வாதி, 2 முதல் 5 பிரதிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். அனைவருமே ஆரம்பத்தில் வெளிநாட்டில்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி நாடுதிரும்பி சுமார் 2 , 3 ஆண்டுகள் இருக்கும், அதற்குமுன்பு வெளிநாட்டில் அனைவரும் ஒன்றாக தான் வேலை செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. எனக்கு திருமணமாகி 12 வருடங்கள் ஆகிறது. எனது கணவர், மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகள் அனைவரும்கூட்டாக உழைத்து 1ம் பிரதிவாதியாகிய இவர்களின் தாயாருக்கு பணம் அனுப்புவார்கள் என்றால் சரிதான். வாதிக்கும், 2 முதல் 5 பிரதிவாதிக்கும் 2022 முதல் பிரச்சனை, அதற்கு முன்பு எதுவும் இல்லை. இதற்குமுன்பு சமுதாய பெரியோர்கள் முன்பு குடும்ப சொத்துக்கள் மற்றும் வீடுகள் யார், யாருக்கு எந்தெந்த பாகம்

என்று பேசப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு பேசப்பட்ட சமயத்தில் தான் வீட்டில் ஒருபகுதி எனக்கும், ஒருபகுதி சிவனுக்கும் என்று பேசப்பட்டது என்றால் சரிதான். புஞ்சை(தாவா சொத்து) 2ம் பிரதிவாதிக்கு ஒதுக்கியதால்தான் அவர் எனக்கு வீடு எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்திலும் எனது கணவருக்கும் பங்குள்ளது.

4. தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில்தான் இருந்தது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அவரது கணவரான எனது மாமனார் எழுதிக்கொடுத்த சொத்து என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணப்படி எனது மாமனார் 1ம் பிரதிவாதிக்கு 1994லேயே எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். எனது மாமனார், 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தவிவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

5. எனது மாமனார், 1ம்பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்தஆவணம் மோசடியான ஆவணம் என்று வழக்கு தாக்கல் செய்தபின்னோ அல்லது இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 2020ம் ஆண்டுதான் 1ம் பிரதிவாதி, 2ம்பிரதிவாதிக்கு தாவா சொத்தை ஏற்பாடு ஆவணம் மூலம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் மோசடியான ஆவணம் என்று சொல்லி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

6. எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு, 4ம் பிரதிவாதி கூறியதின் பேரில்தான் வழக்கை தாக்கல் செய்துள்ளேன்

என்றால் சரிதான். கடந்த 28 ஆண்டுகளுக்கு மேலாக வா.சா.ஆ.3 ஆவணம் குறித்து பற்றி முழுமையாக தெரிந்தும், எந்த வித நடவடிக்கையும் எடுக்காததால் நான் கேட்டுள்ள பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஏற்கனவே நான் தாக்கல் செய்த வீடு தொடர்புடைய வழக்கு இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்படபோதும், 2 ம் பிரதிவாதியை வீண் கஷ்ட நஷ்டப்படுத்தவேண்டும் என்று இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆவணங்கள் படி 1 ம் பிரதிவாதிக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதிக்கு சொத்துக்களை பொறுத்து முழுஉரிமை உள்ளதால் அவர் யாருக்கு வேண்டுமானலும் வில்லங்க பாராதீனம் செய்யமுடியும் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி